III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.148/2016

Deposition of witness for the Plaintiff/PW1

Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant

in accordance with the provision of Act I for 1873 on 23-06-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ரூப்ராஜ் | Village | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசராணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.2 லுள்ள தமிழ் கையெழுத்து என்னுடையது அல்ல. வா.த.சா.3 லுள்ள தமிழ் கையெழுத்துக்கள் நந்தகோபாலினுடையது. வா.த.சா.2 ல் உள்ள கையெழுத்தும் நந்தகோபாலினுடையது. வா.த.சா.4 ல் உள்ள கையெழுத்தும் நந்தகோபாலினுடையது. நந்தகோபால் ஆவிச்சி பள்ளியில் கிளார்க்காக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். அவர் என்னிடம் பணி புரிகின்றாரா அல்லது புரிந்தாரா என்றால் இரண்டும் இல்லை. எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். வா.த.சா.2 ல் உள்ள அன்பழகன் என்ற கையெழுத்தில் "**ழகன்**" என்பது கூட்டு எழுத்தாக உள்ளது. இரண்டு இடத்தில் "**ன்**" என்னும் எழுத்தில் மேலே உள்ள புள்ளி ஆங்கில எழுத்து “O” போன்று உள்ளது என்றால் சரிதான். **வா.த.சா.3** ல் உள்ள அன்பழகன் என்ற கையெழுத்தில் "**ழகன்**" என்பது கூட்டு எழுத்தாக உள்ளது. இரண்டு இடத்தில் "**ன்**" என்னும் எழுத்தில் மேலே உள்ள புள்ளி ஆங்கில எழுத்து “O” போன்று உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.4 ஆவணத்தில் உள்ள அன்பழகன் என்ற கையெழுத்தில் "**கன்**" என்பது கூட்டு எழுத்தாக உள்ளது. இரண்டு இடத்தில் "**ன்**" என்னும் எழுத்தில் மேலே உள்ள புள்ளி ஆங்கில எழுத்து “O” போன்று உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.1 ஆவணத்தில் உள்ள

அன்பழகன் என்னும் கையெழுத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியாக உள்ளது என்று சொன்னால் இந்த கையெழுத்தும் அந்த கையெழுத்தும் ஒரே போலதான் உள்ளது. அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய கேள்விக்கு சாட்சி பதில் அளித்த பின்பாக அவர் சொல்லும் பதிலை பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கூறினார். சாட்சி தற்பொழுது வா.த.சா.1 ஆவணத்திலுள்ள அன்பழகன் என்னும் கையெழுத்தில் **"ழகன்"** என்னும் எழுத்துக்கள் சேர்ந்தே எழுதப்பட்டுள்ளது என்று கூறுகின்றார். **"ழகன்"** என்னும் எழுத்துக்கள் வா.த.சா.1ல் தனித்தனியாக எழுதப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.1ல் உள்ள அன்பழகன் என்னும் கையெழுத்தில் **"ன்"** என்னும் எழுத்தின் மேலே ஒரு புள்ளி மட்டும் தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். வா.த.சா.1ல் முழு ஆவணத்திலும் அன்பழகன் என்னும் கையெழுத்திற்கு மேல் புள்ளி தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும்பொழுது வா.த.சா. 2, 3, 4 ஆவணங்களை நந்தகோபால் எழுதுவதற்கான காரணம் என்னவென்றால் அவர்தான் எங்கள் ஆவணங்கள் சட்டப்படியாக இருக்கின்றதா என்று பார்ப்பார். மேலும் எனக்கு அவ்வளவாக முறையாக எழுது தெரியாது. அதனால் நந்தகோபால் எழுதினார். எனக்கு நன்றாக எழுத தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நந்தகோபால் சட்டம் படித்திருக்கிறார் என்றால் அவர் என்ன படித்திருக்கின்றார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு அனுபவம் இருக்கின்றது. அவருக்கு சட்ட சம்பந்தமாக அனுபவம் இருக்கின்றது என்று சான்றிதழ் எதுவும் போட்டிருக்கின்றேனா என்றால் நான் அவ்வாறு எதுவும் போடவில்லை. நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையிலேயோ நிரூபண வாக்குமூலத்திலேயோ சட்டப்படியான அறிவிப்பிலேயோ நந்தகோபல் தான் வா.த.சா.2, 3, 4 ஆவணத்தை எழுதினார் என்று கூறவில்லை. வா.த.சா.2, 3, 4 ஆவணங்கள் வவூச்சர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். இது ஒரு printed form. இந்த வவூச்சரை நாங்கள் பயன்படுத்துவதில்லை எப்பொழுது தேவைப்படுகின்றதோ அப்பொழுது பயன்படுத்துவோம். இந்த வவூச்சர்கள் போதுமான வகையில் ஸ்டாம்ப் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்திய முத்திரைச் சட்டத்தின் படி வா.த.சா.2, 3, 4 ஆவணங்களில் போதுமான முத்திரை வில்லைகள் ஒட்டப்படவில்லை என்பதால் ஏற்கப்படமுடியாத ஆவணம் என்றால் சரியல்ல.

வா.த.சா.2, 3, 4 ஆவணங்கள் குறைவான முத்திரை வில்லைகளை கொண்டிருப்பதால் அவைகளுக்கு கூடுதலான முத்திரை வில்லைக்கான தண்டம் செலுத்தப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.த.சா.1 ல் உள்ள ஒத்துக்கொள்ளப்பட்ட பிரதிவாதியின் கையெழுத்தும் வா.த.சா.2, 3, 4 ஆகியவற்றில் இருப்பதாக சொல்லப்படும் பிரதிவாதியின் கையெழுத்தும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. வா.த.சா.2, 3, 4 ஆகியவற்றில் இருப்பதாக சொல்லப்படும் பிரதிவாதியின் கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்தே அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.த.சா.3 ஆவணத்தில் உஷா முதல் சாட்சியாக கையொப்பமிட்டு இருக்கின்றார் என்றால் சரிதான். பி.த.சா.3 ஆவணத்தை எழுதியது J.Regie என்னும் வழக்கறிஞர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது பிரதிவாதி தரப்பில் எனது வழக்கறிஞருக்கு ஆவணங்களை தாக்கல் செய்ய கொடுக்கப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். அது பி.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இந்த அறிவிப்பிற்கு என்னுடைய வழக்கறிஞர் கொடுத்த பதில் அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவது தான். அது பி.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. 2010 முதல் 2015 வரையிலான வருமான வரி கணக்கை நான் ஏன் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வருமான வரி கணக்கை வருமான வரி அலுவலத்தில் தாக்கல் செய்துவிட்டேன். நான் பிரதிவாதிகளுக்கு பணம் கொடுக்கவில்லை என்பது தெரிய வந்து விடும் என்பதால் தான் என்னுடைய வருமான வரி கணக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.2, 3, 4 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று தெரிந்துவிடும் என்பதால் வருமான வரி கணக்கை அறிவிப்பு கொடுத்தும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).